(எட்டாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. **187**.]

# பாராளுமன்றக் கூட்ட அறிக்கை

2017 ஆகஸ்ட் 09, புதன்கிழமை பி.ப. 1.00 மணிக்கு

## சமூகமளித்தோர்:

**கௌரவ கரு ஜயசூரிய,** சபாநாயகர்

**கௌரவ திலங்க சுமதிபால,** பிரதிச் சபாநாயகரும் குழுக்களின் தவிசாளரும்

**கௌரவ செல்வம் அடைக்கலநாதன்,** குழுக்களின் பிரதித் தவிசாளர்

---

**கௌரவ ரணில் விக்கிரமசிங்க,** பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சரும்

**கௌரவ (திருமதி) தலதா அதுகோரல,** வெளிநாட்டு தொழில்வாய்ப்பு அமைச்சரும் நீதி அமைச்சரும்

**கௌரவ ஜோன் அமரதுங்க,** சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ மஹிந்த அமரவீர,** கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சர் மற்றும் மகாவலி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) சரத் அமுனுகம,** விசேட பணிப்பொறுப்புக்களுக்கான அமைச்சர்

**கௌரவ கயந்த கருணாதிலக்க,** காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சரும் அரசாங்கக் கட்சி முதற்கோலாசானும்

**கௌரவ அகில விராஜ் காரியவசம்,** கல்வி அமைச்சர்

**கௌரவ லக்ஷ்மன் கிரிஎல்ல,** உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரும் பாராளுமன்றச் சபை முதல்வரும்

**கௌரவ தயாசிறி ஜயசேகர,** விளையாட்டுத்துறை அமைச்சர்

**கௌரவ நிமல் சிறிபால த சில்வா,** போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சர்

**கௌரவ துமிந்த திசாநாயக்க,** கமத்தொழில் அமைச்சர்

**கௌரவ எஸ். பீ. திசாநாயக்க,** சமூக வலுவூட்டல், நலன்புரி மற்றும் கண்டி மரபுரிமைகள் அமைச்சர்

**கௌரவ எஸ். பீ. நாவின்ன,** உள்ளக அலுவல்கள், வடமேல் அபிவிருத்தி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ காமினி ஜயவிக்கிரம பெரேரா,** வலுவாதார அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சரும் புத்தசாசன அமைச்சரும்

**கௌரவ ஏ. டி. சுசில் பிரேமஜயந்த,** விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சர்

**கௌரவ சஜித் பிரேமதாஸ,** வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சர்

**கௌரவ (திருமதி) சந்திராணி பண்டார,** மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ திலக் மாரபன,** அபிவிருத்திப் பணிப்பொறுப்புகள் அமைச்சரும் வெளிவிவகார அமைச்சரும்

**கௌரவ பைஸர் முஸ்தபா,** மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்

**கௌரவ அநுர பிரியதர்ஷன யாப்பா,** அனர்த்த முகாமைத்துவ அமைச்சர்

**கௌரவ சாகல ரத்நாயக்க,** சட்டமும் ஒழுங்கும் மற்றும் தென் அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ அர்ஜுன ரணதுங்க,** பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ பாட்டளி சம்பிக ரணவக்க,** மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ சந்திம வீரக்கொடி,** திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சர்

**கௌரவ மலிக் சமரவிக்ரம,** அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்

**கௌரவ மங்கள சமரவீர,** நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்

**கௌரவ மஹிந்த சமரசிங்க,** துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ டபிள்யூ. டீ. ஜே. செனெவிரத்ன,** தொழில், தொழிற்சங்க உறவுகள் மற்றும் சப்பிரகமுவ அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ விஜித் விஜயமுனி சொய்சா,** நீர்ப்பாசன மற்றும் நீரக வளமூல முகாமைத்துவ அமைச்சர்

**கௌரவ டி.எம். சுவாமிநாதன்,** சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்ற மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ ரஊப் ஹகீம்,** நகரத் திட்டமிடல் மற்றும் நீர்வழங்கல் அமைச்சர்

**கௌரவ அப்துல் ஹலீம்,** தபால், தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ கபீர் ஹஷீம்,** அரச தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ பி. ஹரிசன்,** கிராமியப் பொருளாதார விவகாரங்கள் பற்றிய அமைச்சர்

**கௌரவ பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா,** பிரதேச அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன,** அரச தொழில் முயற்சிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ வசந்த அலுவிஹாரே,** கமத்தொழில் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ரீ. பீ. ஏக்கநாயக்க,** காணி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ நிரோஷன் பெரேரா,** தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ஏ. டி. பிரேமதாச,** கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ பாலித ரங்கே பண்டார,** நீர்ப்பாசன இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (திருமதி) விஜயகலா மகேஸ்வரன்,** சிறுவர் அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ வீ.எஸ். இராதாகிருஷ்ணன்,** கல்வி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ இரான் விக்கிரமரத்ன,** நிதி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ திலிப் வெதஆரச்சி,** கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ரவீந்திர சமரவீர,** தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சுஜீவ சேனசிங்க,** சர்வதேச வர்த்தக இராஜாங்க அமைச்சர்

**கௌரவ லக்ஷமன் செனெவிரத்ன,** விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ஏ. எச். எம். பௌஸி,** தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அசோக் அபேசிங்க,** போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் பிரதி அமைச்சர்

**கௌரவ லஸந்த அலகியவன்ன,** நிதி மற்றும் வெகுசன ஊடக பிரதி அமைச்சர்

**கௌரவ பைஸால் காசிம்,** சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ பிரதி அமைச்சர்

**கௌரவ துனேஷ் கன்கந்த,** அனர்த்த முகாமைத்துவ பிரதி அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) (திருமதி) அனோமா கமகே,** பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி பிரதி அமைச்சர்

**கௌரவ அநுராத ஜயரத்ன,** மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் பிரதி அமைச்சர்

**கௌரவ (திருமதி) சுமேதா ஜீ. ஜயசேன,** வலுவாதார அபிவிருத்தி மற்றும் வன சீவராசிகள் பிரதி அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா,** தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் பிரதி அமைச்சர்

**கௌரவ கருணாரத்ன பரணவிதான,** திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி பிரதி அமைச்சர்

**கௌரவ அஜித் பி. பெரேரா,** மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி பிரதி அமைச்சர்

**கௌரவ லக்ஷமன் வசந்த பெரேரா,** பெருந்தோட்ட கைத்தொழில் பிரதி அமைச்சர்

**கௌரவ அருந்திக்க பர்னாந்து,** சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ மத அலுவல்கள் பிரதி அமைச்சர்

**கௌரவ தாராநாத் பஸ்நாயக்க,** தொலைத்தொடர்புகள் மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் பிரதி அமைச்சர்

**கௌரவ நிஷாந்த முதுஹெட்டிகமகே,** துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அலுவல்கள் பிரதி அமைச்சர்

**கௌரவ துலீப் விஜேசேகர,** தபால், தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் பிரதி அமைச்சர்

**கௌரவ அமீர் அலி சிஹாப்தீன்,** கிராமிய பொருளாதார அலுவல்கள் பிரதி அமைச்சர்

**கௌரவ எச்.எம்.எம். ஹரீஸ்,** விளையாட்டுத்துறை பிரதி அமைச்சர்

---

**கௌரவ ஹெக்டர் அப்புஹாமி**

**கௌரவ மஹிந்த யாப்பா அபேவர்தன**

**கௌரவ சிசிர குமார அபேசேகர**

**கௌரவ துஷார இந்துனில் அமரசேன**

**கௌரவ ஜே.சீ. அலவத்துவல**

**கௌரவ டலஸ் அழகப்பெரும**

**கௌரவ ஆனந்த அலுத்கமகே**

**கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே**

**கௌரவ அ. அரவிந்த் குமார்**

**கௌரவ ஜே.எம். ஆனந்த குமாரசிறி**

**கௌரவ வேலு குமார்**

**கௌரவ நாலக்க பிரசாத் கொலொன்னே**

**கௌரவ கவீந்திரன் கோடீஸ்வரன்**

**கௌரவ சந்திரசிறி கஜதீர**

**கௌரவ சந்திம கமகே**

**கௌரவ உதய பிரபாத் கம்மன்பில**

**கௌரவ நிஹால் கலப்பத்தி**

**கௌரவ தினேஷ் குணவர்தன**

**கௌரவ பந்துல குணவர்தன**

**கௌரவ எட்வட் குணசேகர**

**கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர**

**கௌரவ எஸ். எம். சந்திரசேன**

**கௌரவ டி.வீ. சானக**

**கௌரவ சிசிர ஜயகொடி**

**கௌரவ மலித் ஜயதிலக**

**கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ**

**கௌரவ நலின் பண்டார ஜயமஹ**

**கௌரவ அனுர சிட்னி ஜயரத்ன**

**கௌரவ பியங்கர ஜயரத்ன**

**கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன**

**கௌரவ லக்கி ஜயவர்தன**

**கௌரவ மயில்வாகனம் திலகராஜா**

**கௌரவ ஆறுமுகன் தொண்டமான்**

**கௌரவ எம்.எஸ். தௌபீக்**

**கௌரவ பியல் நிசாந்த த சில்வா**

**கௌரவ ரீ. ரன்ஜித் த சொய்சா**

**கௌரவ அநுர திசாநாயக்க**

**கௌரவ மயந்த திசாநாயக்க**

**கௌரவ விமலவீர திசாநாயக்க**

**கௌரவ வீரகுமார திசாநாயக்க**

**கௌரவ சாலிந்த திசாநாயக்க**

**கௌரவ டக்ளஸ் தேவானந்தா**

**கௌரவ முஹமட் நவவி**

**கௌரவ வாசுதேவ நாணாயக்கார**

**கௌரவ இ. சாள்ஸ் நிர்மலநாதன்**

**கௌரவ புத்திக பத்திறண**

**கௌரவ (டாக்டர்) ரமேஷ் பதிரண**

**கௌரவ கே.கே. பியதாஸ**

**கௌரவ சனத் நிசாந்த பெரேரா**

**கௌரவ அசோக்க பிரியந்த**

**கௌரவ பந்துல லால் பண்டாரிகொட**

**கௌரவ முஹம்மது இப்ராஹிம் முஹம்மது மன்சூர்**

**கௌரவ எஸ்.எம். மரிக்கார்**

**கௌரவ செயிட் அலி ஸாஹிர் மௌலானா**

**கௌரவ கே. காதர் மஸ்தான்**

**கௌரவ இம்ரான் மஹ்ரூப்**

**கௌரவ (பேராசிரியர்) ஆசு மாரசிங்க**

**கௌரவ எஸ்.சீ. முத்துகுமாரண**

**கௌரவ (வண.) அதுரலியே ரதன தேரர்**

**கௌரவ பிமல் ரத்நாயக்க**

**கௌரவ பிரசன்ன ரணதுங்க**

**கௌரவ பிரசன்ன ரணவீர**

**கௌரவ ரொசான் ரணசிங்க**

**கௌரவ இஷாக் ரஹுமான்**

**கௌரவ முஜிபுர் ரஹுமான்**

**கௌரவ ஹர்ஷண ராஜகருணா**

**கௌரவ சமல் ராஜபக்ஷ**

**கௌரவ காமினி லொக்குகே**

**கௌரவ ஜானக வக்கும்புர**

**கௌரவ (கலாநிதி) ஜயம்பதி விக்ரமரத்ன**

**கௌரவ ஏ.ஏ. விஜேதுங்க**

**கௌரவ (டாக்டர்) (திருமதி) துஸிதா விஜேமான்ன**

**கௌரவ லக்ஷ்மன் ஆனந்த விஜேமான்ன**

**கௌரவ (திருமதி) ரோஹிணி குமாரி விஜேரத்ன**

**கௌரவ (திருமதி) ஸ்ரீயாணி விஜேவிக்கிரம**

**கௌரவ சமிந்த விஜேசிறி**

**கௌரவ கஞ்சன விஜேசேகர**

**கௌரவ ஹேஷான் விதானகே**

**கௌரவ விமல் வீரவங்ச**

**கௌரவ சி. சிறீதரன்**

**கௌரவ ஞானமுத்து ஸ்ரீநேசன்**

**கௌரவ (திருமதி) சாந்தி ஸ்ரீஸ்கந்தராசா**

**கௌரவ ஜயந்த சமரவீர**

**கௌரவ சந்தித் சமரசிங்க**

**கௌரவ ராஜவரோதயம் சம்பந்தன்,** பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர்

**கௌரவ எம்.எச்.எம். சல்மான்**

**கௌரவ முத்து சிவலிங்கம்**

**கௌரவ எம்.ஏ. சுமந்திரன்**

**கௌரவ வடிவேல் சுரேஷ்**

**கௌரவ மாவை சோ. சேனாதிராசா**

**கௌரவ செஹான் சேமசிங்க**

**கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி**

**கௌரவ விஜேபால ஹெட்டிஆரச்சி**

**கௌரவ இந்திக அநுருத்த ஹேரத்**

**கௌரவ விஜித ஹேரத்**

திரு. தம்மிக தசநாயக்க, பாராளுமன்றச் செயலாளர் நாயகம்

திரு. நீல் இத்தவல, பணியாட்டொகுதிப் பிரதானியும் பிரதிப் பாராளுமன்றச் செயலாளர் நாயகமும்

திருமதி குஷானி ரோஹனதீர, உதவிச் செயலாளர் நாயகம்

திரு. டிக்கிரி கே. ஜயதிலக, உதவிச் செயலாளர் நாயகம்

**ஒத்திவைப்பின் பிரகாரம் பாராளுமன்றம் கூடியது. சபாநாயகர் தலைமை தாங்கினார்.**

**1. சபாநாயகரின் அறிவித்தல்கள்: சபாநாயகர் பின்வருமாறு அறிவித்தல் விடுத்தார்,—** இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 79 ஆம் இலக்க, உறுப்புரையின் ஏற்பாடுகளின் பிரகாரம் **"நாட்டைக் கட்டியெழுப்புதல் வரி (திருத்தம்)"** எனும் சட்டமூலத்தில், 2017 ஆகஸ்ட் மாதம் 09 ஆம் திகதி என்னால் சன்றுரை எழுதப்பட்டதென்பதை அறிவிக்க விரும்புகிறேன்.

**2. பத்திரங்கள் சமர்ப்பணம்:** (1) சபாநாயகர், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான நடத்தைக் கோவை இறுதி வரைவினைச் சமர்ப்பித்தார்.

மேற்படி வரைவு அறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(2) உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர், 2017 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க குறைநிரப்பு மதிப்பீட்டினைச் சமர்ப்பித்து, அக் குறைநிரப்பு மதிப்பீட்டை அரசாங்க நிதிக் குழுவுக்கும் மற்றும் போக்குவரத்து மற்றும் தொலைத் தொடர்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கும் ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(3) உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர்,

(i) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 27(1) ஆம் பிரிவின் கீழ் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் விதப்புரையின் மீது, ரஜரட்டை பல்கலைக்கழக சமூக விஞ்ஞானம் மற்றும் மானுடவியல் பீடத்தின் ஆங்கில மொழி கற்பித்தல் பிரிவை ஆங்கில மொழி கற்பித்தல் துறையாகத் தரமுயர்த்துதல் தொடர்பில் உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2017 யூன் 30 ஆம் திகதிய 2025/38 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை; மற்றும்

(ii) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 27(1) ஆம் பிரிவின் கீழ் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் விதப்புரையின் மீது, கொழும்புப் பல்கலைக்கழகத்தின் கலைப்பீடத்தில் ஆங்கிலமொழி கற்பித்தல் துறையொன்றை நிறுவுவது தொடர்பில் உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2017 யூன் 30 ஆம் திகதிய 2025/39 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை

ஆகியவற்றைச் சமர்ப்பித்து மேற்படி கட்டளைகளைச் கல்வி மற்றும் மனிதவள அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்துமாறு பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(4) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர், 2016 ஆம் ஆண்டுக்கான நுவரெலியா மாவட்ட செயலகத்தின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையையும் கணக்குகளையும் சமர்ப்பித்து அவ்வறிக்கையை உள்ளக நிருவாகம் மற்றும் அரச முகாமைத்துவம் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(5) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர், 2016 ஆம் ஆண்டுக்கான தேசிய நூதனசாலைகள் திணைக்களத்தின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையைச் சமர்ப்பித்து மேற்படி அறிக்கையை இளைஞர், விளையாட்டுத்துறை, கலை மற்றும் மரபுரிமைகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(6) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர், 2016 ஆம் ஆண்டுக்கான உணவு ஆணையாளர் திணைக்களத்தின் செயல்நிறைவேற்று அறிக்கையைச் சமர்ப்பித்து மேற்படி அறிக்கையை உற்பத்திகளும் சேவைகளும் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(7) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர், 2014 ஆம் ஆண்டுக்கான இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபையின் வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பித்து மேற்படி அறிக்கையை வலுச்சக்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(8) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர், 2014 ஆம் ஆண்டுக்கான லங்காபுத்ர அபிவிருத்தி வங்கியின் ஆண்டறிக்கையைச் சமர்ப்பித்து மேற்படி அறிக்கையை பொருளாதார அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(9) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர், 2016 ஆம் ஆண்டுக்கான இலங்கை பொலிஸின் செயலாற்று அறிக்கையைச் சமர்ப்பித்து மேற்படி அறிக்கையை தேசிய பாதுகாப்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**3. குழு அறிக்கைகள் சமர்ப்பணம் :** (1) சுகாதாரம் மற்றும் மனித சேமநலம், சமூக வலுவூட்டல் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தவிசாளர் கௌரவ லக்கி ஜயவர்தன, அக்குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட,—

(i) 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளுக்கான ஸ்ரீ லங்கா அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கைகள் ;

(ii) 2013 ஆம் ஆண்டுக்கான நிர்மாணப் பயிற்சியளிப்பு அபிவிருத்திக்கான நிறுவனத்தின் வருடாந்த அறிக்கை;

(iii) 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளுக்கான தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் வருடாந்த அறிக்கைகள் ;

(iv) 2012 ஆம் ஆண்டுக்கான கூட்டாதன முகாமைத்துவ அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை;

(v) 2008, 2009, 2010, 2011, 2012, 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளுக்கான கட்டடத் திணைக்களத்தின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கைகள்;

(vi) 2008, 2009, 2010, 2011, 2012, 2013, 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளுக்கான கொலொன்னாவ அரசாங்கத் தொழிற்சாலை திணைக்களத்தின் செயல்திறன் அறிக்கைகள் ; மற்றும்

(vii) 2012 ஆம் ஆண்டுக்கான அரச அபிவிருத்தி நிர்மாணக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கை

தொடர்பிலான அக்குழுவின் அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை ***சபாபீடத்திலிடப்பட*** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(2) வியாபாரம் மற்றும் வணிகம் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தவிசாளர் கௌரவ செயிட் அலி ஸாஹிர் மௌலானா சார்பாக அக் குழுவின் உறுப்பினர் கௌரவ கே.கே. பியதாச, அக்குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட,

(i) "2013 ஆம் ஆண்டுக்கான இலங்கை கைப்பணிப்பொருட்கள் சபையின் வருடாந்த அறிக்கை" மற்றும்

(ii) "2014 ஆம் ஆண்டுக்கான பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை"

தொடர்பிலான அக் குழுவின் அறிக்கையச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை ***சபாபீடத்திலிடப்பட*** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(3) சர்வதேச தொடர்புகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தவிசாளர் கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே, அக்குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட,—

(i) “2016 ஆம் ஆண்டுக்கான வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கை” மற்றும்

(ii) “2014 ஆம் ஆண்டுக்கான இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் ஆண்டறிக்கையும் கணக்குகளும்”

தொடர்பிலான அக் குழுவின் அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை ***சபாபீடத்திலிடப்பட*** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(3) அரசாங்க நிதி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தவிசாளர் கௌரவ எம்.ஏ. சுமந்திரன் அக்குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட,

(i) “இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுத் தலைவரின் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளில் திருத்தம் மேற்கொள்ளல்” மற்றும்

(ii) “2016 ஆம் ஆண்டுக்கான இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கை”

தொடர்பிலான அக்குழுவின் அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை ***சபாபீடத்திலிடப்பட*** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

**4. மனுக்கள் :**

(1) (i) கதிர்காமம், கலஹிட்டிய, பழைய வீதி, கால்லெவத்த எனும் முகவரியில் வதியும் திரு. சி.ஆர்.பீ. மானவடுவினது 2017.05.14 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(ii) ஹம்பாந்தோட்டை, மயுரபுர, மெத் செவன, இல. 73 இல் வதியும் திரு. கே.வி.ஏ. சுனிலினது 2017.07.11 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்; மற்றும்

(iii) தெவிநுவர, கல்கனே வீதி, சமகி மாவத்தை, இல. 49/9 இல் வதியும் திரு. பி.எம்.பி. குமாரவினது 2017.06.19 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்

கௌரவ நிஹால் கலப்பத்தி சமர்ப்பித்தார்.

(2) (i) பத்தேகம, கும்மே, “சுஹத” எனும் முகவரியில் வதியும் திரு. ஜே.டி. சந்திரகுமார ஜயசேகரவினது 2017.04.05 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்; மற்றும்

(ii) காலி, பஹல டிக்சன் வீதி, வனப்பகுதி அலுவலகத்தில் பணிபுரியும் திரு. ஆர்.எஸ். லியனகேயினது 2017.01.30 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

கௌரவ விஜேபால ஹெட்டிஆரச்சி சமர்ப்பித்தார்.

25அ ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளைக்கமைய மேற்படி மனுக்கள் பொது மனுக்கள் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டன.

**5. சட்டமூலம் கொண்டுவர அனுமதி:** “அரவிந்த் குமார் மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்” எனும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக என கௌரவ வேலு குமார் பிரேரித்தார். கௌரவ எம்.எச்.எம். சல்மான் அனுவதித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதற்கமையச் சட்டமூலம் முதலாவது முறையாக மதிப்பிடப்பெற்று அச்சிடப்பட வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

47 (5) ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளைக்கமைய அறிக்கையிடுவதற்காகச் சட்டமூலம் சமூக வலுவூட்டல், நலன்புரி மற்றும் கண்டி மரபுரிமைகள் அமைச்சரின் கவனத்திற்கு ஆற்றுப்படுத்தப்பட்டது.

**6. சட்டமூலம் கொண்டுவர அனுமதி:** "கே.கே. பியதாஸ மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்" எனும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக என கௌரவ பந்து லால் பண்டாறிகொட பிரேரித்தார். கௌரவ சந்தித் சமரசிங்க அனுவதித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதற்கமையச் சட்டமூலம் முதலாவது முறையாக மதிப்பிடப்பெற்று அச்சிடப்பட வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

47 (5) ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளைக்கமைய அறிக்கையிடுவதற்காகச் சட்டமூலம் சமூக வலுவூட்டல், நலன்புரி மற்றும் கண்டி மரபுரிமைகள் அமைச்சரின் கவனத்திற்கு ஆற்றுப்படுத்தப்பட்டது.

(பி.ப. 2.39 மணிக்கு குழுக்களின் பிரதித் தவிசாளர் தலைமை தாங்கினார்.)

**7. கடல்சார் தீழ்ப்புத் தடைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்:** பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவர் சார்பாக உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் சமர்ப்பித்த பிரேரணை ,— 2008 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க கடல்சார் தீழ்ப்புத் தடைச் சட்டத்தின் பிரிவு 6 (உ) மற்றும் பிரிவு 21 உடன் சேர்த்து வாசிக்கப்படும் பிரிவு 51 இன் கீழ் மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2016 திசெம்பர் 06 ஆம் திகதிய 1996/27 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2017.06.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

"கௌரவ எட்வட் குணசேகர தலைமை தாங்குவாராக" என கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சரும் மகாவலி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சருமானவர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 4.10 மணிக்கு கௌரவ எட்வட் குணசேகர தலைமை தாங்கினார்.)

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**8. இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுத் தலைவரின் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளில் திருத்தம் மேற்கொள்ளல் :** பிரதம அமைச்சரும், தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவர் சார்பாக காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர் சமர்ப்பித்த பிரேரணை,— இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 41(ஆ) ஆவது உறுப்புரை மற்றும் 1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் 3 மற்றும் 3(4) பிரிவுகளின் பிரகாரம், மனித உரிமைகள் துறை சம்பந்தமான பரந்தளவிலான அறிவு மற்றும் செயன்முறை ரீதியிலான அனுபவத்தைக் கொண்ட பேராதனைப் பல்கலைக்கழகத்தின் சட்டத் திணைக்களத்தின் தலைவராக பணியாற்றும் கலாநிதி திருமதி நெலும் தீபிக்கா உடகம அவர்கள் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவராக மூன்று (03) வருட காலத்திற்கு 2015.10.30 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் ஜனாதிபதி அவர்களால் நியமிக்கப்பட்டுள்ளாராதலாலும்;

2015.10.30 ஆம் திகதி முதல் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவராக கடமையாற்றும் கலாநிதி திருமதி நெலும் தீபிக்கா உடகம அவர்கள் மூன்று (03) வருட சேவைக் காலத்தின் பின்னர் மீண்டும் தனது நிரந்தரப் பதவிக்குச் செல்வதற்கு கருதியிருப்பதுடன், இந்த மூன்று (03) வருட காலப் பகுதியில் சகல படிகளும் உள்ளடங்கலான பல்கலைக்கழகச் சம்பளத்தை அவர் இழந்தால் அவருக்கு கிடைக்க வேண்டிய அனுகூலங்கள் மீது பாதிப்பு ஏற்படும் என அவர் குறிப்பிட்டுள்ளாராதலாலும்;

அதற்கமைய, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தற்போதைய தலைவராக கடமையாற்றும் கலாநிதி திருமதி நெலும் தீபிக்கா உடகம அவர்களுக்கு தனிப்பட்ட வகையில் செல்லுபடியாகும் வகையில் அவர் சேவையாற்றும் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் சகல படிகளும் உள்ளடங்கிய முழு நேர விரிவுரையாளருக்குரிய சம்பளத்தை 2015.10.30 ஆம் திகதி முதல் செலுத்துவதற்கும், ஆணைக்குழுவின் தலைவர் பதவிக்குரித்தான ரூபா 10,000/- மாதாந்தத் தொலைபேசிக் கொடுப்பனவு, தனிப்பட்ட பாவனைக்கு உரிமையைக் கொண்ட உத்தியோகபூர்வ வாகனம் மற்றும் அந்த வாகனத்திற்கு 225 லீட்டர் எரிபொருள் அல்லது சந்தையில் நிலவும் எரிபொருளுக்கான விலைக்குச் சமமான எரிபொருள் கொடுப்பனவைச் செலுத்துவதற்கும் 2017.06.13 ஆம் திகதி அமைச்சரவை அங்கீகாரத்தை வழங்கியுள்ளதாதலாலும்;

அதற்கமைய, 1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் 8 ஆவது பிரிவின் பிரகாரம் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவரான திருமதி நெலும் தீபிக்கா உடகம அவர்களுக்கு அரசாங்கத்தின் திரட்டு நிதியத்திலிருந்து மேலே குறிப்பிடப்பட்ட மாதாந்தச் சம்பளம் மற்றும் படிகளைச் செலுத்துவதற்கு இப்பாராளுமன்றம் பிரேரணை நிறைவேற்றுகிறது.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

“கௌரவ லக்கி ஜயவர்தன தலைமை தாங்குவாராக” என காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 5.37 மணிக்கு கௌரவ லக்கி ஜயவர்தன தலைமை தாங்கினார்.)

**9. ஒத்திவைப்பு (கிண்ணியா மற்றும் மூதூர் வைத்தியசாலைகளை மத்திய அரசின் கீழ் கொண்டு வருதல்):** “இப்பாராளுமன்றம் இப்பொழுது ஒத்திவைக்கப்படுமாக” என காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை எடுத்தியம்பப் பெற்று விவாதிக்கப்பட்டது.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

பி.ப. 6.34 மணிக்கு, 2016 மார்ச் மாதம் 08 ஆம் திகதிய சபைத் தீர்மானத்திற்கு ஏற்ப, 2017 ஆகஸ்ட் மாதம் 10 ஆம் திகதி வியாழக்கிழமை மு.ப. 10.30 மணி வரை பாராளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டது.